பிறந்தநாள்: தியாகி இமானுவேல் சேகரனாரின் வழியில்

சமத்துவத்தை நிலைநாட்ட உழைப்போம்!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து – புகழாரம்!



சென்னை, அக். 10 -

தியாகி இமானுவேல் சேகரனாரின் பிறந்தநாளையொட்டி, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், கழக ஆட்சியில் இமானுவேல் சேகரனாருக்கு மணிமண்டபம் அமைத்து அவரது நினைவைப் போற்றியுள்ளோம் எனவும், தியாகி இமானுவேல் சேகரனாரின் பிறந்தநாளில் அவரது வழியில் அனைவரும் ஒன்றிணைந்து சமத்துவத்தை நிலைநாட்டிட உழைத்திடுவோம் என்றும் புகழாரம் சூட்டியுள்ளார்.

இன்று (09.10.2026), கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலை தளப் பதிவு வருமாறு: -

"சாதி ஒழிப்பிற்காகவும் அனைவரும் சமமாக நடத்தப்படுவதற்கும் போராடிய தியாகி இமானுவேல் சேகரனார் அவர்களின் பிறந்தநாள்.

இந்நாளை அரசு விழாவாகக் கொண்டாடிட ஆணை பிறப்பித்து, இமானுவேல் சேகரனாருக்கு மணிமண்டபமும் அமைத்து அவரது நினைவைப் போற்றியது நமது Dravidian Model அரசு.

ஆங்கிலேயர்களின் ஆதிக்கம், சாதிய ஒடுக்குமுறை ஆகிய இரண்டையும் எதிர்த்துப் பாடுபட்ட இமானுவேல் சேகரனாரின் வழியில் அனைவரும் ஒன்றிணைந்து சமத்துவத்தை நிலைநாட்ட உழைப்போம்!

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர்கள் சிபாரிசால் கோவில் அதிகாரிகள் அவதி!

"காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் சட்டசபை தொகுதியில வர்ற குன்றத்தூர் 11வது வார்டுல, வாணியன் குளம் இருக்கு... அந்த பகுதி மக்களுக்கு இதுதான் நிலத்தடி நீராதாரமா இருக்குது பா...

"குளத்தின் மேற்கு கரையில இருந்த 50 சென்ட் இடத்துல, 20 சென்ட் நிலத்தை த.வெ.க., பிரமுகர் ஒருத்தர் ஆக்கிரமிச்சிருக்காரு... இதுல, கட்டுமான பணிகளை செய்ய தொகுதியின் ஆளுங்கட்சி முக்கிய புள்ளி பச்சை கொடி காட்டியிருக்காரு பா...

"அங்க நடக்கிற கட்டுமான பணிகள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கக் கூடாதுன்னு, குன்றத்தூர் தாசில்தாருக்கும் வாய் மொழி உத்தரவு போட்டிருக்காரு... இப்ப, குளக்கரையை ஆக்கிரமிச்ச இடத்துல கட்டுமான பணிகள் விறுவிறுப்பா நடந்துட்டு இருக்குது பா..." என்றார் அன்வர்பாய்.

"வாங்க அஜ்மீர்... தென்னரசு ஒத்தாசையா இருக்காரோல்லியோ...

"திருச்சி, சமயபுரம் மாரியம்மன் கோவிலுக்கு சொந்தமா, 500 பேர் உட்காரக்கூடிய திருமண மண்டபம் இருக்கு... திருமணம் உள்ளிட்ட நிகழ்ச்சிகளுக்கு மட்டும், இதை வாடகைக்கு தருவா ஓய்..

"அதேநேரம், பக்தர்கள் மற்றும் சுற்றுலா பயணியர்னு யாரும் தங்கறதுக்கு தர மாட்டா... ஒரு மாசத்துக்கு முன்னாடி, கீழச்செவல்பட்டியைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்டவா கோவிலுக்கு வந்திருந்தா ஓய்..

"அப்ப, விதிகளை மீறி அவாளுக்கு திருமண மண்டபத்தை வாடகைக்கு விட்டிருக்கா... இதுக்கு, துறையின் மேலிட புள்ளி உட்பட மூணு முக்கிய புள்ளிகள் சிபாரிசு பண்ணியிருக்கா ஓய்..

"இதேபோல, மண்டபத்தை தனி நபர்களுக்கு வாடகைக்கு தரும்படி, ஆளுங்கட்சி அமைச்சர்கள் தரப்புல இருந்து அதிகாரிகளுக்கு அடிக்கடி அழுத்தம் வர்றது... 'பொது வெளியில நியாயமா பேசறவா இப்படி நடந்துக்கலாமா'ன்னு, அதிகாரிகள் புலம்பறா ஓய்..."

நன்றி: தினமலர் – டீ கடை பெஞ்ச் (8.10.26)

யு.பி.ஐ. மூலம் பி.எப். பணத்தை எடுக்கும் வசதி டிசம்பரில் அறிமுகம்!

புதுடெல்லி, அக். 10 -

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி அமைப்பு (இ.பி.எப்.ஓ.) உறுப்பினர்கள் வசதிக்காகவும், வேகமாக சேவைகளை வழங்கவும் பல டிஜிட்டல் சீர்திருத்தங்களை அவ்வப்போது அமல்படுத்தி வருகிறது. தற்போது, பி.எப். பணத்தை யு.பி.ஐ. மூலம் எடுக்கலாம்.

அனைத்து விவரங்களும் சரிபார்க்கப்பட்ட பிறகு, பிஎப்.ல் இருந்து எடுக்கப்படும் பணம் சந்தாதாரரின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்படுகிறது. அங்கிருந்து பணத்தை எடுத்து கொள்ளலாம். தற்போது யு.பி.ஐ. செயலிகள் வாயிலாக பி.எப். பணத்தை எடுக்கும் வசதியை வரும் டிசம்பர் மாதத்திற்குள் அறிமுகம் செய்ய ஏற்பாடுகள் தீவிரமாக நடந்து வருகிறது.

இதற்கான சோதனை முறைகள் முழுவீச்சில் நடந்து வருகிறது. புதிய செயலியையும் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி அமைப்பு அறிமுகம் செய்கிறது. சந்தாதாரர்கள் அனுமதியோடு கையிருப்பில் இருந்து 75 சதவீதம் வரை யு.பி.ஐ. மூலம் பணத்தை எடுக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய விதிகளின் படி, பி.எப். இருப்பில் குறைந்தபட்சம் 25 சதவீதம் சந்தாதாரரின் கணக்கில் இருக்க வேண்டும். கல்வி, திருமணம் மற்றும் வீடு கட்டுவது உள்ளிட்ட அத்தியாவசிய செலவுகளுக்கு ஒரு சந்தாதாரர் கையிருப்பில் இருந்து 75 சதவீதம் வரை எடுத்து கொள்ளலாம் என குறிப்பிடத்தக்கது.

இது நடைமுறைக்கு வந்தால். பி.எப். சந்தாதாரர்கள், தங்களுக்கு அனுமதிக்கப்பட்ட பி.எப். தொகையை யு.பி.ஐ. மூலமாக நேரடியாக தங்கள் வங்கி கணக்கிற்கு மிக எளிதாக மாற்றிக்கொள்ள முடியும். தற்போதுள்ள நடைமுறைப்படி, பி.எப். பணத்தை எடுக்க ஆன்லைன் மூலம் கோரிக்கை வைத்து, அது பரிசீலிக்கப்பட்டு, அதன்பிறகு வங்கி கணக்கிற்கு பணம் வர சில நாட்கள் ஆகும். ஆனால், இந்த புதிய வசதியில் பணம் எடுக்கும் செயல்முறை மிகவும் எளிமையாக்கப்பட்டு உடனடியாக பணம் கிடைக்க வழிவகை செய்யப்படும். விரைவில் பிஎப் அமைப்பு எவ்வளவு பணத்தை யு.பி.ஐ. மூலமாக எடுக்கலாம்.

பி.எப். சந்தாதாரர்கள் இதற்கு என்னென்ன தகவல்களை அப்டேட் செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட தெளிவான வழிகாட்டுதல்களை வெளியிட உள்ளது.

பாட்னாவில் இருந்து லக்னோ சென்ற

இண்டிகோ விமானம் மின்னல் தாக்கி சேதம்!

110 பயணிகள் உயிர் தப்பினர்!

பாட்னா, அக். 10 -

பாட்னாவில் இருந்து லக்னோ நோக்கி சென்ற இண்டிகோ விமானம் நடுவானில் சுமார் 17,000 அடி உயரத்தில் பறந்துகொண்டிருந்தபோது மின்னல் தாக்கியது பயணிகளிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மின்னல் தாக்கியதில் விமானத்தின் முன்பகுதியில் உள்ள ரேடோம் சேதமடைந்தது. இந்த சம்பவத்தின் போது, 104 பயணிகள் மற்றும் 6 விமானப் பணியாளர்கள் என மொத்தம் 110 பேர் விமானத்தில் இருந்தனர். மின்னல் தாக்கியதும் அவசரமாக லக்னோ விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டது.

மின்னல் தாக்கியதில் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டதால், விமானம் லக்னோ விமான நிலையத்தில் இயக்கப்படாமல் நிறுத்தப்பட்டது. விமான நிறுவனம் பயணிகளுக்காக மற்றொரு விமானத்திற்கு ஏற்பாடு செய்தது.

அதனைத் தொடர்ந்து, 104 பயணிகளும் நேற்று முன்தினம் மாலை 6:22 மணியளவில் மாற்று விமானத்தில் அகமதாபாத் புறப்பட்டனர்.

இந்த சம்பவம் தொடர்பாக விமானப் போக்குவரத்து இயக்குநரகம் விசாரணையைத் தொடங்கியுள்ளது. தேவையான பராமரிப்பு மற்றும் ஒழுங்குமுறை அனுமதிகள் கிடைத்த பிறகே விமானம் மீண்டும் இயக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

முரசொலி செல்வம்

அக்டோபர் 10 (2024)



முத்தமிழறிஞர் கலைஞரின் மூத்த பிள்ளையான முரசொலியின் பணிகளைத் தன் தோளில் சுமந்துகொண்டு இளமைப் பருவம் முதலே திறம்படச் செயலாற்றியவர்.

தலைசிறந்த எழுத்தாளர் – பத்திரிகையாளர் – நூலாசிரியரான இவர், பத்திரிகைச் சுதந்திரத்தைப் பாதுகாத்த கருத்துரிமைப் போராளி.

கழகத்தின் போர்வாளான முரசொலி நாளேட்டின் 35 ஆண்டுகளுக்கும் மேலாக ஆசிரியராகப் பொறுப்பேற்று தன் எழுத்துகளால் ஜனநாயகக் குரலாக ஒலித்தவர்.

அடக்குமுறைக்கு அஞ்சாமல் சட்டமன்றத்தில் கூண்டிலேறி கருத்துரைத்தவர். தேர்தல் களம் முதல் திரைப்படப் பணிகள் வரை அனைத்துத் துறைகளிலும் முத்திரையைப் பதித்தவர். எந்த நிலையிலும் கழகமே மூச்சு என வாழ்ந்த ஆழமான கொள்கைவாதி. சிலந்தி என்ற பெயரில் முரசொலியில் அவர் எழுதிய நையாண்டியும் நகைச்சுவையும் ததும்பும் கட்டுரைகள் கழகத்தின் இளைய தலைமுறையினருக்குக் கொள்கை இரத்தம் பாய்ச்சும் வலிமை கொண்டவை. தன் இறுதிமூச்சு நிற்கும் வரை முரசொலியில் கட்டுரை எழுதியவர்.

முரசொலியில் தன்னுடைய கட்டுரைகளைப் போலவே திராவிட இயக்கத்தின் இளைய எழுத்தாளர்களுடைய கட்டுரைகளைத் தொடர்ந்து பதிவு செய்து ஊக்குவித்தவர் அவர். தொலைக்காட்சி விவாதங்களில், சமூக வலைத்தளங்களில் கருத்துரைப்போரைத் தேடிக் கண்டறிந்து இயக்கத்தின் படைக்கலனாக மாற்றியவர்.

"சிறுவயது முதலே எனக்கு அண்ணனாக – வழிகாட்டியாக, இயக்கப் பணிகளில் ஆலோசனைகள் வழங்கி, நெருக்கடி நேரங்களில் தெளிவான தீர்வுகளை முன்வைத்து, கழகத்துடனான என் வளர்ச்சியில் தோளோடு தோள் நின்றவர். மிச்சமிருந்த தோளை நான் இழந்தேன். கழகத்தின் கொள்கைத் தூண் ஒன்றை நாம் இழந்தோம். "போய்விட்டீர்களே.. போர்முரசே.. திராவிட முரசொலித்த முரசொலி செல்வமே.. பண்பின் திருவுருவமே... திராவிட இயக்கத்தின் படைக்கலனே... கழகத்தின் கொள்கைச் செல்வமே.. நெஞ்சிலும் நினைவிலும் என்றும் நிலைத்திருப்பீர்!"'' என கழகத் தலைவர் அவர்கள் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

தேனி தெற்கு மாவட்டம்

அ.தி.மு.க.வைச் சேர்ந்த முல்லை சேகர் தி.மு.க.வில் இணைந்தார்!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில்

சென்னை, அக். 10 - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், நேற்று முன்தினம் (8.10.2026), காலை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், தேனி தெற்கு மாவட்டம், அ.தி.மு.க.வைச் சேர்ந்த முல்லை சேகர் தி.மு.க.வில் இணைந்தார்.

பதவி பெற்றுத் தருவதாக லஞ்சம்! திருவைகுண்டம்

த.வெ.க. எம்.எல்.ஏ. மீது நடவடிக்கை எடுத்திடுக!

கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. வலியுறுத்தல்!

தூத்துக்குடி, அக். 10 -

கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. ட்விட்டர் பதிவு வருமாறு:

திருவைகுண்டம் தொகுதி த.வெ.க. சட்டமன்ற உறுப்பினர் கு.சரவணன், ஆதிதிராவிடர் நல வாரிய உறுப்பினர் பதவி வாங்கித் தருவதாகக் கூறி வைணவப் பெருமாள் என்பவரை ஏமாற்றி லஞ்சம் பெற்றதாகக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

ஊழலற்ற ஆட்சி நடத்துகிறோம் என்பவர்களின் உண்மை முகம் இதுதான்!

ஆட்சிக்கு வந்த புதிதிலேயே, பெண் ஒருவருக்கு அரசு வேலை வாங்கித் தருவதாக ஏமாற்றிப் பாலியல் வன்கொடுமை செய்த வழக்கிலும் இதே சட்டமன்ற உறுப்பினர் மீது பாதிக்கப்பட்ட பெண் குற்றஞ்சாட்டினார். அரசு மருத்துவமனையில் நள்ளிரவில் ஆய்வு என்ற பெயரில் மருத்துவரை அவமானப்படுத்தியவரும் இதே நபர்தான்.

எனது தூத்துக்குடி தொகுதி மக்களின் நலனுக்கு அச்சுறுத்தலாக இந்த நபர் இருக்கிறார் என்பது மேலும் கவலையளிக்கிறது.

மக்களின் பிரதிநிதியாக நீடிக்கத் தகுதியற்ற சரவணன் மீதான குற்றச்சாட்டுகள் மீது உரிய விசாரணை நடத்தப்பட வேண்டும்.

இவ்வாறு கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. வலியுறுத்தியுள்ளார்.

குமரி மாவட்டத்தில் பரவலாக சாரல் மழை!

குமரி, அக். 10-

குமரி மாவட்டத்தில் கடந்த ஒரு வார காலமாக மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பரவலாக மழை பெய்து வருகிறது. குறிப்பாக பேச்சிப்பாறை மற்றும் பெருஞ்சாணி அணை பகுதிகளில் விட்டுவிட்டு கனமழை கொட்டி தீர்த்து வருகிறது.

மாவட்ட முழுவதும் கடந்த சில நாட்களாகவே சீதோஷ்ண நிலையில் திடீர் மாற்றம் ஏற்பட்டு மழை பெய்து வந்த நிலையில், நேற்று முன்தினம் இரவு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பரவலாக சாரல் மழை பெய்தது. நாகர்கோவிலில் நேற்று அதிகாலை நேரத்தில் மழை பெய்யத் தொடங்கியது.

சுமார் அரை மணி நேரத்திற்கு மேலாக விட்டு விட்டுச் சாரல் மழை பெய்தது. காலை நேரத்தில் பெய்த மழையின் காரணமாக மாணவ-மாணவிகள் குடை பிடித்தவாறும், மழை கோட் அணிந்தவாறும் பள்ளிக்கு வந்தனர்.

கன்னியாகுமரி பகுதியிலும் காலை முதலே வானத்தில் கருமேகங்கள் திரண்டு காணப்பட்டன. இதனால் சூரிய உதயத்தை காண முடியாமல் சுற்றுலா பயணிகள் ஏமாற்றம் அடைந்தனர். கன்னியாகுமரி கடற்கரை பகுதியிலும் அதிகாலையில் சாரல் மழை பெய்தது.